
தொகுதி 1
சித்திரம் 7
பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்
ஆயிரம் யாசகர்கள்
www.ponnivala.com
© 2012 Ponnivala Publishing





<u>மறுவர்ணனை</u>
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

<u>தமிழாக்கம்</u>
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

<u>சித்திரங்கள்</u>
ரவிசந்திரன & குழு

<u>வடிவமைப்பு</u>
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்


<u>ஒப்பச்சர்</u>
முலர்விழி ராஜ்

<u>வெளியீட்டாளர்</u>
பொன்னிவளா
பப்ளிகேசன்


© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.



தாமரை எதிகாலத்தைப் பற்றி சிந்திக்க தொடங்கினாள்...
என் கணவர் எனக்கு உறவினர் என்பதில் மகிழ்ச்சி! விஷ்ணுவே நேரில் வந்து திருமணத்தை நடத்தி வைத்தார்.
ஆனால், என் கணவர் சிறுவனாக இருக்கையில் பங்காளிகள் அவர் நிலத்தை அபகரித்து, அரண்மனையும் இடித்து விட்டனர்.
இப்பொழுது இந்தக் குடிசையில் வாழ்கிறோம். இனிமேல் எங்கள் வாழ்க்கை நன்றாக இருக்கும் என்று நம்புகிறேன்.


சில நாட்களுக்குப் பின் குன்னுடையான் தன் நிலத்திற்கு சென்று, ஏதாவது முளைத்திருக்கிறதா? என்று பார்வையிட்டான்.
ஒரு விதை கூட முளைக்கவில்லையே!
நான் கஷ்டப்பட்டது வீணாகிவிட்டதே!
குன்னுடையான் மனமுடைந்து கவலையுடன் வீட்டிற்கு சென்றார்.
ஏதாவது முளைத்துள்ளதா?
ஊகும்... ஒன்றுகூட முளைக்கவில்லை.



வழக்கம்போல் தினமும் செல்லாத்தாளை வணங்கி வந்தனர். இப்படியே நான்கு வாரங்களுக்கு பின்...
தாமரை! நான் வயலுக்கு சென்று வருகிறேன்.
நானும் உங்களுடன் வருகிறேன்.
ஆகா! அனைத்தும் முளைத்துவிட்டதே!
இனி நமக்கு நல்ல காலம் தான்!
மழையும் சரியான நேரத்தில் பெய்யவேண்டுமே!
கவலைப்பட வேண்டாம்! செல்லாத்தா கருனையால் நல்லதே நடக்கும்.


இவர்களின் உரையாடலை, அங்கே ஒருவன் மறைந்திருந்து கேட்டான்.
அந்த பொறாமை பிடித்த பங்காளிகள் கொடுத்த வறுத்த விதைகள் முளைத்துவிட்டது. ஆனால், அவை விளைச்சல் தருமா?
சந்தேகப்படாதே!
அறுவடை காலம் வந்ததும், பார்! அமோக விளைச்சல் கிடைக்கும்!
அப்படியே நடந்தால் சந்தோசமே!
மறைந்திருந்து கேட்டாவன், பங்காளிகளில் ஒருவன். அவன் கேட்டதை சகோதரர்களிடம் சொல்ல தங்கவளநாடு நோக்கி சென்றான்.


பொன்னிவளநாட்டில் நல்ல மழை பெய்தது.
சட...சடசட
சட...சடசட
சட...சடசட
சட...சடசட
குன்னுடையானும், தாமரையும் செல்லாத்தாளுக்கு நன்றி கூறி பூஜை செய்தனர்.


அதே சமயம் தங்கவளநாட்டில்...
பொன்னப்பா! ஏன் இப்படி ஓடி வருகிறாய்?
குன்னுடையானின் பயன்படாத நிலத்தில், பயிர்களை கண்டேன்!
என்ன! வறுத்தவிதைகள் முளைத்திருக்கிறதா?
என்ன சொல்கிறாய்? அது சாத்தியமே இல்லை!
பொறுங்கள்! நாம் சண்டை போட வேண்டாம். ஏதாவது யோசனை செய்வோம்!
நம் மாடுகளை அவிழ்த்து விட்டு, அவன் வயலை நாசம் செய்வோம்!
நல்ல யோசனை! பயிர்கள் நன்றாக வளர்ந்ததும் செய்வோம்.


சிறிதுகாலத்திற்குப்பின், ஒரு நாள் இரவு, பங்காளிகள் குன்னுடையானின் வயலை அடைந்தனர்.
அவர்கள் மாடுகளை அவிழ்த்து விட்டனர்.
சடக் சடக் சடக்
மாடுகள் முளைவிட்ட பயிர்களை எல்லாம் நாசமாக்கியது. மறுநாள் காலையில் வயலுக்கு வந்த குன்னுடையான்...
ஐயோ!... என்ன கொடுமையிது! எந்த துஷ்டமிருகம் இதை செய்தது?
என் கடின உழைப்பு இப்படி வீணாப்போனதே?
விஷ்ணுவே! நான் என்ன தவறு செய்தேன். ஏன் எனக்கு இப்படி நடக்கிறது?


குன்னுடையான், மனம்தளர்ந்து வீட்டிற்கு சென்றான். அவன் புலம்பலை கேட்ட விஷ்ணு...
என்ன அநியாயம்!
நான் சென்று அவனுக்கு உதவி செய்ய வேண்டும்.
உஷ்ஷ்..........
விஷ்ணு தன் சக்தியைப்பயன்படுத்தி பயிர்களை முன்பிருந்ததுபோல் செய்தார்.


தாமரை!...
தாமரை!...
ஏன் இந்த பதட்டம்?
நம் வயலில் முளைத்திருந்த பயிர்களை...
ஏதோ மிருகம் நேற்று இரவு நாசம் செய்துவிட்டது.
ஐய்யோ!
நாம் இருவரும் சென்று பார்க்கலாம் வாருங்க.



இருவரும் வீட்டிலிருந்து வயலுக்குச்சென்றனர். அங்கே...
ஆ! என்ன அதிசயம்! பயிர்கள் மறுபடியும் நிமிர்ந்து விட்டதே!
அத்தோடு நன்றாக வளர்ந்திருக்கிறதே!
நிச்சயம் இது விஷ்ணுவின் கருணைதான்.



நாம் கட்டாயம் விஷ்ணுவிற்கு நன்றி செலுத்த வேண்டும்.
குன்னுடையான் வயலுக்குள் இறங்கிப்பார்த்து ஆச்சரியமடைந்தார்.
தாமரை! இங்கே எந்த கதிரும் விரியவில்லையே.
பயிர் நிமிர்ந்திருக்கிறது. ஆனால்...


நான் முன்னமே சொன்னேன், வருத்தவிதைகள் முளைத்தாலும், பயன்தராது என்று.
இதுவும் பங்காளிகளின் சித்து வேலையாகத்தான் இருக்கும்
எனக்குத் தெரியாது தாமரை! எனக்குத் தெரியாது!
தாமரை, கதிரின் அருகில் சென்று பார்த்தபொழுது...
ஆ! இது என்ன மாயம்!
சீக்கிரம் இங்கே வாருங்கள்!
என்ன?



தாமரை அங்கிருந்த கதிரை திறந்து பார்த்தாள். இருவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர்.
ஆ! எவ்வளவு அழகான வைரம், வைடூரியம், முத்து, பவளம், மாணிக்கம் அனைத்தும் உள்ளதே!
இப்போது பார்த்தாயா!
தாமரை! நீ முதலில் வறுத்தவிதைகள் முளைக்காதென்றாய்! பின் பயன் கிடைக்காதென்றாய்!
அனைத்தும் விஷ்ணுவின் கருணைதான்.
இந்த விலைமதிப்பற்ற கதிர்களை எப்படி அறுவடை செய்வது?


இதை நாம் கூலி ஆட்களை வைத்து செய்யமுடியாது. ஏனென்றால், நம் அதிர்ஷ்டம் அனைவருக்கும் தெரிந்துவிடும்.
குறிப்பாக பங்காளிகள் மூலம் பிரச்சனை வரும்.
அணியப்பூரில் இருந்து ஆட்களை அழைத்து வந்து, அவர்களை தட்டை மட்டும் அறுக்க சொல்லுங்கள்.
பின் கதிரிரை நாம் திறந்து கொள்வோம்.
நல்ல யோசனை தாமரை!
குன்னுடையான் அணியப்பூருக்கு புறப்பட்டான்.


குன்னுடையான் அணியப்பூரில் தனக்கு முன்பு உதவிய கவுண்டர்களை பார்த்தான்.
இந்த வருஷம் நல்ல மழை!
அங்கே பாருங்கள் குன்னுடையான்.
குன்னுடையாக் கவுண்டரே! காட்டில் வெள்ளாமை எப்படி இருக்கிறது?
கவுண்டர்களே! அறுவடைக்கு தயாராக உள்ளது. அதனால் தான் உங்களிடம் உதவி கேட்டு வந்துள்ளேன்.
நல்லது குன்னுடையாக் கவுண்டரே! எனது ஆட்களுடன் அடுத்த திங்கட்கிழமை வருகிறேன்.


திங்கட்கிழமை அணியப்பூர் கவுண்டர்கள் வந்தனர்.
குன்னுடையாக் கவுண்டரே!
கவுண்டர்களே! நீங்கள் தட்டை மட்டும் அறுத்துப்போடுங்கள். நாங்கள் கதிர்களை வெட்டிக் கொள்கிறோம்.
சரக் சரக்
சரக் சரக்
சரக் சரக்
அணியப்பூர் கவுண்டர்கள் வேலையை தொடங்கினர்.


வேலை முடிந்தது. நாங்கள் சென்று வருகிறோம்.
எங்களுடைய வண்டி மற்றும் கூடைகளை விட்டுட்டுச்செல்கிறோம்.
உங்களுடைய பொருட்களை கூலியுடன் அனுப்பி வைக்கிறேன். அத்தோடு ஆறு வள்ள சோளமும் அனுப்புகிறேன்..
அனைவருக்கும் நன்றி!.
அணியப்பூர் கவுண்டர்கள் சென்றதும், குன்னுடையானும் தாமரையும் கதிரைப் பிரித்து கூடையில் போட்டனர். பின்பு இருவரும் கூடையை வண்டியில் ஏற்றி வீட்டிற்கு கொண்டு சென்றனர்.


குடிசையில் குன்னுடையான் ...
தாமரை! நாமே எல்லாக்கதிரையும் திறக்க முடியும் என்று எண்ணுகிறாயா?
நம்மால் முடிந்தளவு செய்வோம்.
அதற்கு மேல் விஷ்ணுவே துணை!
விண்ணையும், மண்ணையும் படைத்தவரே! எங்களுக்குத் துணையாக வரவேண்டும் காஞ்சிநாதா!







இருவரும் கதிர்களை பிரித்து,
அதில் இருந்தவற்றை
கூடையில் நிரப்பினர்.
விஷ்ணுவின் சக்தியால்
வேலை விரைவாக முடிந்தது.




இங்கே பாருங்கள் அனைத்து கூடைகளும் நிரம்பிவிட்டதே!
இதை அளந்து பார்க்க வேண்டும்.
ஒரு வள்ளம், இரண்டு வள்ளம்....
மூன்று வள்ளம், நான்கு வள்ளம், ஐந்து, ஆறு ...
ஏழு... எட்டு... ஒன்பது...



விஷ்ணு மேலேயிருந்து அவர்களை பார்த்து...
நான் அவர்களின் குணத்தை சோதிக்க வேண்டும்.
அவர்கள் பிறருக்கு உதவி செய்வார்களா என்று!
விஷ்ணு பூமிக்கு வந்து, ஒரு பிச்சைக்காரனாக உருமாறினார்.
என்ன ஆச்சரியம்! வீட்டுக்கு முன் இவ்வளவு பிச்சைக்காரர்கள்!
போகச்சொல் அவர்களை!
வேண்டாம்! நாம் ஏதாவது தானம் கொடுக்க வேண்டும்.



தாமரை ஒரு பாத்திரத்தில் முத்துக்களை எடுத்து வந்தாள், ஆனால் அது அவர்களுக்குப் போதவில்லை.
கடவுளே! இங்கே நிறையப் பேர் இருக்கிறார்களே!
தாமரை! பிச்சைக்காரர்களுக்கு தானம் கொடுத்துக்கொண்டே இருந்தாள்.
விரைவில் எல்லாம் காலியானது.




இதைக்கண்ட குன்னுடையான் கடுங்கோபம் கொண்டார்.
முட்டாள் பெண்ணே! என்ன காரியம் செய்தாய்?
இதைக்கொண்டு தான் பிழைக்கத் திட்டமிட்டிருந்தேன்.
கவலைப்படாதீர்கள்! இல்லாதவர்களுக்கு தானம் செய்யவதால், நாம் ஒருபோதும் குறைந்து போவதில்லை!
குன்னுடையான் சிறிது சமாதனமாகி...
சரி! நடந்தது, நடந்துவிட்டது.
வா! செல்லாத்தாகோவிலுக்கு சென்று பூஜை செய்யலாம். பின்பு நான் சோழ மன்னரை பார்க்கச் செல்ல வேண்டும்.


இருவரும் கோவிலில் பூஜை செய்தனர்.
தாமரை! நீ வீட்டுக்கு செல்! நான் சோழதேசம் சென்றுவருகிறேன்.
சரி! நீங்கள் சீக்கரம் வந்துவிடுங்கள்.
குன்னுடையான் ஒரு பானை நிறைய தயிரை எடுத்துக்கொண்டு சோழதேசம் சென்றார்.


இறுதியாக சோழமன்னனின் அரண்மனையை அடைந்தார்.


அதேசமயத்தில்...
ம்...இது என்னுடைய தருணம்!
உஷ்ஷ்..........
விஷ்ணு, அந்த வீட்டில் இருந்த கூடைகளை தன் சக்தியைப் பயன்படுத்தி மீண்டும் நிரப்பினார்.



இதையரியாத தாமரை வீட்டிற்கு வந்து கதவை திறக்க முயன்ற பொழுது...
ஓ.....ஓ ....
ம்...ம்...
என்ன இது! நான் பலமாகத் தள்ளினாலும் திறக்க முடியவில்லையே!
இப்ப என்ன செய்வது?
என் கணவர் வேறு சோழ தேசம் சென்றுள்ளார். எனக்கு உதவ இங்கு யாரும் இல்லையே!
ஷ்ஷ்ஷெஷ்
கடைசியில் தாமரை கதவைத் திறக்க முடியாமல், அதன் அருகிலேயே அமர்ந்து, களைப்பினால் தூங்கிவிட்டாள்.



அதே சமயத்தில் குன்னுடையான் சோழமன்னரின் அரண்மனையை அடைந்தார்.
நில்! யார் நீ?
நான் ஒரு விவசாயி, பொன்னிவளநாட்டிலிருந்து வருகிறேன்.
மன்னருக்கு நன்றி செலுத்தி, இச்சிறிய பரிசையும் அவருக்கு கொடுக்க வேண்டும்.
சரி! நீ உள்ளே போகலாம்.


குன்னுடையாக்
கவுண்டரே! மங்களம்
உண்டாகட்டும்!
உன் பங்காளிகள் தந்த சிறிய
நிலத்தில் விவசாயம் செய்தாயா?
அறுவடை எல்லாம் எப்படி?
ஆமாம்
மன்னா! உங்களுடைய
ஆசியினால், நான் நல்ல
அறுவடையைப்
பெற்றேன்.
அதற்காக நன்றி
கூறி, இந்த சிறிய
காணிக்கையையும் கொடுக்க
வந்தேன்.
உன்னை நினைத்து
எனக்குப்
பெருமையாக இருக்கிறது.
மிக்க நன்றி
மன்னா!
குன்னுடையான்
வீட்டிற்கு செல்கிறார்.


குன்னுடையான் வீட்டை நெருங்கியதும், தாமரை வெளியே தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறார்.
தாமரை! தாமரை! எழுந்திரு!
ஏன் இங்கே தூங்குகிறாய்?
கதவை திறக்க முடியவில்லை.
எங்கே! நான் திறக்கிறேன்!
குன்னுடையான் தன்பலம் முழுவதையும் திரட்டி, கதவைத் தள்ளினார். இறுதியாக கதவு திறந்தது.


இருவரும் உள்ளே வந்ததும், திகைத்து விட்டனர்! காலியான அவர்களின் கூடைகள் அனைத்தும் மறுபடியும் நிறைந்து காணப்பட்டது.
இவையனைத்தும் விஷ்ணுவின் கருணைதான்!
அவர் நம்மை சோதித்துப் பார்த்திருக்கிறார்.
இந்த செல்வத்தை கொண்டு நம் எதிர்காலத்தை திட்டமிடவேண்டும்.
நாம் இங்கே, உங்கள் பெற்றோரின் அரண்மனை போல் ஒன்று கட்டவேண்டும்.







குன்னுடையானும், தாமரையும்
விஷ்ணுவின் அருளினால்
பெருஞ்செல்வத்தை பெற்று,
மகிழ்ச்சியாக வாழத்
தொடங்கினர்.
இந்நிலையில், குன்னுடையானின்
குடும்பம் பெற்ற
"குழந்தையில்லா கொடுஞ்சாபம்"
இவர்களை என்ன செய்யும்?



# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்

www.ponnivala.com/comic7tamil





வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!




01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com
மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:
www.ponnivala.com

ISBN 978-1-927093-47-4
90000 >
9 781927 093474

© 2012 Ponnivala Publishing